1980 ஜூலை 7]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, 'மெச்சூரிட்டி ஆஃப் ஏஜ் அண்ட் எக்ஸ்பீரியன்ஸ்' என்று சொன்னால் அறிவு முதிர்ச்சி அடைவது என்று பொருள். அது 6ஆவது வயதிலிருந்து ஆரம்பமாகிறது. தற்போது சொத்துரிமைக்குக்கூட சட்டத்தின் அடிப்படையிலே 18 வயது என்று வைத்திருக்கிறோம். 18 வயதில் 'மெச்சூரிட்டி' அடைந்து விடுகிறார்கள் என்பதால் தான் 18 வயதிலேயே சொத்துரிமைக்கு இந்தச் சட்டத்தில் இடமிருக்கிறது. அப்படிப்பட்ட நேரத்தில் வாக்காளர்களுக்கு ஏன் 18 வயது என்று வைத்துக்கொள்ளக்கூடாது என்பதை வருகின்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அவர்கள் பேசலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையில் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு.

உரிமைப் பிரச்சினை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினை.

பேரவையின் 246 வது விதியின் கீழ், திரு. ரகுமான்கான் அவர்கள் அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினைக்கு அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இது பத்திரிகையின் மீது உள்ளதால், அப்பத்திரிக்கைக்கு எழுதிக் கேட்டு விளக்கம் பெற்றபின் பேரவையில் எடுத்துக் கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

நோட்டுப் புத்தகக் காகிதம் தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சென்னை பேப்பர் மற்றும் போர்டு கன்வெர்ட்டர்ஸ் அசோசியேஷன் மத்திய அரசிடமிருந்து 1800 டன் காகிதத்தை மலிவு விலையில் பெற்று 900 டன் காகிதத்தை மட்டுமே நோட்டுப் புத்தகமாக தயாரித்து தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்திற்கு வழங்கிவிட்டு மீதி 900 டன் விதிகளுக்கு புறம்பாக அதிக விலைக்கு வெளி மார்க்கெட்டில் விற்றதனால் ஏற்பட்டுள்ள பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி பற்றி விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை